பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 20 செவ்வாய்க்கிழமை 04.01.2022 கதிர் 288

## கொலையில் முடிந்த டிக்டொக் பிரச்சினை

கொழும்பு 13, கிராண்ட்பாஸ் - மாதம் பிட்டிய பகுதியில் கூரான ஆயுதத்தால் குத்தி 17 வயதான இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

'டிக்டொக்' வீடியோ தொடர்பில் ஏற்பட்ட முறுகல் காரணமாக குறித்த இளைஞர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று 2

## பரந்தனில் படுகொலை செய்யப்பட்ட இளைஞருக்கு நீதி கோரிப் போராட்டம்

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி, பரந்தனில் படுகொலை செய்யப் பட்ட இளைஞருக்கு நீதி கோரி இன்றும் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

புதுவருட தினம் அன்று, பரந்தன் சந்தியில் இளைஞர்களுக்கிடையில் ஏற்பட்ட முரண் பாட்டை அடுத்து, இளைஞர் ஒருவர் போத்தலால் குத்திப் படுகொலை செய்யப்பட்டார். குறித்த சம்ப வத்தில் குணரட்ணம் கார்த்தீபன் (வயது-24) எனும் இளைஞரே உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞரை நால்வர் கொண்ட குழு தாக்கிப் போத்தலால் குத்த முயன்றபோது அத னைத் தடுக்க சென்ற அவரது மருமகன் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அதில் 2



# அரசைச் சாடிய சுசிலின் அமைச்சுப் பதவி பறிப்பு

## ஜனாதிபதி கோட்டாபய அதிரடி



சுசில் பிரேமஜயந்த இரா ஜாங்க அமைச்சுப் பதவியில் இருந்து ஜனாதிபதியால் நீக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவுக்கு உள்ள அதிகாரங் களின் பிரகாரம் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. 2

## தகைமையற்ற வேடதாரிகளுக்கு கல்வியின் பெறுமதி தெரியாது!

### பதிலடி கொடுத்தார் சுசில்

நான் மக்களுக்காக உண்மை யையே பேசினேன். பதவி நீக்கம் தொடர்பில் கவலையடைய வில்லை. இனி என் தொழிலைச் செய்வேன்.

– இவ்வாறு பதவி விலக்கப்பட்ட கல்வி இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் இன்று காலை அவர் மேலும் கூறியவை வருமாறு:–

பதவி நீக்கம் பற்றி எனக்கு அறி விக்கப்படவில்லை. ஊடகங்கள் ஊடாகவே அறிந்தேன். நான் 2000ஆம் ஆண்டிலிருந்து அமைச் சுப் பதவியை வகித்து 2



## எங்கள் பக்கம் வாருங்கள்!

### சுசிலுக்குச் சஜித் அணி அழைப்பு

ஜனநாயகம் இல்லாத அணி யில் இருக்க வேண்டாம். எங்கள் பக்கம் வாருங்கள். இணைந்து பணியாற்றுவோம்.

– இவ்வாறு பதவி நீக்கம் செய் யப்பட்டுள்ள இராஜாங்க 2

## மேலும் இரு அமைச்சர்களை பதவிநீக்க ஜனாதிபதி முடிவு

### சுசிலின் இடத்துக்கு எஸ்.பியை நியமிக்கத் தீர்மானம்



அரசை கடுமையாகச் விமர் சிக்கும் மேலும் இரு இராஜாங்க அமைச்சர்களையும் பதவி நீக்கு வது தொடர்பில் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ தற்போது ஆராய்ந்து வருகின்றார் என்று அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடி கின்றது.

அவர்களைப் பதவி நீக்குவ தன் மூலம் ஏற்படும் அரசியல் பின்னடைவு நிலை பற்றியும் இதன்போது ஜனாதிபதியால் கவனம் செலுத்தப்படுகின்றது.

விரைவில் அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறவுள்ளது. அதன்போது இராஜாங்க 2

## மாமனிதர் குமாரின் நினைவேந்தல் நாளை யாழில்

மாமனிதர் குமார் பொன் னம்பலத்தினது 22 ஆவது வருட நினைவேந்தலும் நினை வுப் பேருரையும் யாழ்நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் 04.15 மணி முதல் இடம்பெற 2

## சுசிலின் பதவி நீக்கம் குறித்து நான் கவலை அடைகின்றேன்

### அமைச்சர் டலஸ் பகிரங்கமாகத் தெரிவிப்பு

ஜனாதிபதி நினைத்தால் என்னையும் பதவி நீக்கம் செய்யலாம். அதற்கான அதி காரம் அவருக்கு உள்ளது. இது கட்சியால் எடுக்கப்பட்ட முடிவு அல்ல. சுசில் பிரேம ஜயந்த எனது நண்பர். அவரின் பதவி நீக் கம் தொடர்பில் நானும் கவலை அடை கின்றேன். 2



## சுகாதாரத் தொழிலாளி மீது தாக்குதல்: பிரதேச சபை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்



(இ.கலையமுதன்)

சுகாதாரத் தொழிலாளி மீது தாக்குதல் நடத்தப் பட்டதைக் கண்டித்தும், அதற்கு உரிய நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்தும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை ஊழியர்களால் 2

## கொலையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெல்லம்பிட்டி பகுதியைச் சேர்ந்தவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

## பரந்தனில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
படுகாயமடைந்துள்ள மருமகன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அந்நிலையில் உயிரிழந்த இளைஞரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்ட நிலையில் இன்று அவரது வீட்டில் இறுதிக்கிரியைகள் நடைபெற்ற பின்னர், இளைஞரின் உறவினர்கள், நண்பர்கள் சடலத்துடன் யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலை பரந்தன் சந்தியில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இளைஞரைப் படுகொலை செய்த நபர்கள் பொலிஸாருக்கு நெருக்கமானவர்கள் எனவும், அதனால் அவர்கள் இதுவரை கைதுசெய்யப்படவில்லை எனவும் கூறியே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, நேற்று பரந்தன் சந்திப் பகுதியிலுள்ள கடை உரிமையாளர்கள் கடைகளை மூடிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## எங்கள் பக்கம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களிடம் இன்று கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளர் எஸ்.எம். மரிக்கார் எம்.பி. கூறியவை வருமாறு:-

இது ஜனநாயக நாடு. கருத்துச் சுதந்திரம் இருக்கின்றது. குறிப்பாக மக்கள் பிரதிநிதிக்கு, மக்களின் மனநிலையைப் பிரதிபலிக்கும் உரிமை இருக்க வேண்டும். அந்தவகையில் மக்களின் குரலாகவே சுசில் பிரேமஜயந்த ஒலித்தார். அதற்காக அவர் பதவி நீக்கப்பட்டுள்ளதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஜனநாயகம் இல்லாத, அடக்குமுறை தலைவிரித்தாடும், மக்களின் மனநிலையைப் புரிந்துகொள்ளாத கட்சியில் இனியும் இருக்க வேண்டும். ஜனநாயகத்தை மற்றும் மக்களை நேசிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணையுமாறு அழைப்பு விடுக்கின்றோம் - என்றார்.

## சுசிலின் பதவி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு அமைச்சரவை ஊடகப் பேச்சாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் இறையாய் ஊடகவியலாளர் மாநாட்டின்போது, 'அரசை விமர்சித்ததால் இராஜாங்க அமைச்சுப் பதவியில் இருந்து சுசில் பிரேமஜயந்த நீக்கப்பட்டுள்ளார். அரசை விமர்சிப்பதற்கு ஆளுங்கட்சியில் உள்ளவர்களுக்குத் தடையா?' என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் இந்த ஊடக சந்திப்புக்கு வரும் வழியில்தான் அது தொடர்பில் அறிந்தேன். அரசமைப்பின் பிரகாரம் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தியே ஜனாதிபதி அந்த முடிவை எடுத்துள்ளார். இது கட்சியால் எடுக்கப்பட்ட முடிவு அல்ல. சுசில் பிரேமஜயந்த எனது நண்பர். அவரின் பதவி நீக்கம் தொடர்பில் நானும் கவலை அடைகின்றேன். ஜனாதிபதி நினைத்தால் என்னையும் நீக்கலாம்.

அரசை விமர்சித்ததால்தான் அவர் நீக்கப்பட்டார் எனக் கூறப்படுவதை ஏற்கமுடியாது. தற்போதைய அமைச்சரவையில் சுதந்திரம் இருக்கின்றது.

உதய கம்மன்பில போன்றவர்கள் நீதிமன்றத்தைக்கூட நாடியுள்ளனர் - என்றார்.

## தகைமையற்ற ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வருகின்றேன். மூன்று ஜனாதிபதிகளின் கீழ் வேலை செய்துள்ளேன்.

நான் சட்டத்தரணி. இனி அந்தத் தொழிலை முன்னெடுப்பேன். தகுதியானவர்களுக்கு இடமளிக்கப்பட வேண்டும். தகைமையற்ற வேடதாரிகளுக்குக் கல்வியின் பெறுமதி தெரியாது - என்றார்.

## அரசைச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, அரசை அண்மைக்காலமாக கடுமையாக விமர்சித்து வருகின்றார்.

முடிவெடுக்கும் இடத்தில் தகுதியானவர்கள் இல்லை எனவும் நேற்றுமுன்தினம் அரசை அவர் சாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

## மேலும் இரு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சுப் பதவிகளிலும் மாற்றம் வரவுள்ளது. அவ்வேளையில் இவ் விருவரும் நீக்கப்படலாம் எனத் தெரியவருகின்றது.

இதேவேளை, கல்வி இராஜாங்க அமைச்சுப் பதவியில் இருந்து சுசில் பிரேமஜயந்த இன்று நீக்கப்பட்டார். அவர் வகித்த பதவி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்கவுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## மாமனிதர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வுள்ளது.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய ஆர்வலர்களை கலந்துகொள்ளுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழு வேண்டியுள்ளது.

## சுகாதாரத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று காலை 9 மணியளவில் பகிஷ்கரிப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இணுவில் ஆரம்பப் பாடசாலை முன்பாக வலிகாமம் தெற்கு பிரதேச சபையின்



அனுமதி பெறாது நடைபாதையில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டவரை, நேற்று அங்கிருந்து அப்புறப்படுத்த முற்பட்டவேளையில், குறித்த வியாபாரியால் வருமான வரி பரிசோதகர், சுகாதாரப் பரிசோதகர் அச்சுறுத்தப்பட்டதோடு, பிரதேச சபையில் கடமையாற்றும் சுகாதாரத் தொழிலாளி மீது தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தவிசாளரால் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து குறித்த நபர் கைதுசெய்யப்பட்டார்.

ஆனாலும், குறித்த பகுதியில் இன்றும் தொடர்ந்து வியாபாரம் நடைபெறுவதாகத் தெரிவித்து பிரதேச சபை ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதுடன் பொலிஸார் குறித்த நபரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளனர்.

அதேவேளை, குறித்த பகுதியில் வியாபாரம் இன்று நடைபெறுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்ற நிலையில் உடனடியாக அதனை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று வலிகாமம் தெற்கு பிரதேச சபை தவிசாளர் கருணாகரன் தர்ஷன் தெரிவித்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

"INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"
TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
A/L தொழில்நுட்பப்பிரிவு
இறுதிச் செயலமர்வு - 2021
(Techno World இனால் நடாத்தப்படும் மாபெரும் இறுதிக் கருத்தரங்கு)
சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
06,07,08,09 and, 10 JANUARY 2022
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
ஆசிரியர்கள்
ராகவன்(B.sc)
முருகநிறோயன்(B.sc)
நிறோஜன்(B.sc)
உமாகாந்தன்(BIT)
" காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை "
அனைத்து மாணவர்களும் பங்கு பெறலாம்
இடம் - வெலிங்டன் சந்தி அருகாமை, யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு...
0770175346



077 197 1667, 077 316 4796

மணமகள் விவரம்

பிறந்த திகதி - 01.04.1988 மதம் - இந்து
சாதி - V பெண் நட்சத்திரம் - உத்தரம் 3
கி.பா - 15 செவ் - 9 இல்
தகைமை - B.Com தொழில் - DO அரசசேவை
எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகன்

பிறந்த திகதி - 23.11.1991 மதம் - இந்து
சாதி - V பெண் நட்சத்திரம் - ரோகிணி 4
கி.பா - 21 செவ் / சூரி 10 இல்
தகைமை - IT Soft ware Eng. தொழில் - Company
எதிர்பார்ப்பு - வெளிநாடு உள்நாடு மணமகன்

பிறந்த திகதி - 21.11.1992 மதம் - இந்து
சாதி - V பெண் நட்சத்திரம் - அத்தம்
கி.பா - 13 செவ் 11 இல்
தகைமை - BSc தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - Doctor, Eng. அரச உயர்பதவி மணமகன்

பிறந்த திகதி - 12.08.1993 மதம் - இந்து
சாதி - V பெண் நட்சத்திரம் - கார்த்திகை 4
கி.பா - 46 செவ் 5 இல்
தகைமை - BBA, MBA தொழில் - அரசசேவை கொழும்பு
எதிர்பார்ப்பு - அரசசேவை பட்டதாரி கொழும்பில் தேவை

பிறந்த திகதி - 05.03.1993 மதம் - இந்து
சாதி - V பெண் நட்சத்திரம் - சுவாதி
கி.பா - 18 செவ் 7 இல்
தகைமை - Business Management தொழில் - Bank Officer
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரசசேவை மணமகன் சேவை

பிறந்த திகதி - 30.08.1990 மதம் - இந்து
சாதி V பெண் நட்சத்திரம் - மூலம்
கி.பா - 30 செவ் 1 இல்
தகைமை - Bsc. Msc தொழில் - ஆராய்ச்சியாளர்
எதிர்பார்ப்பு - அரசபட்டதாரி மணமகன்

பிறந்த திகதி - 02.06.1993 மதம் - இந்து
சாதி V பெண் நட்சத்திரம் - விசாகம் 1
கி.பா - 69 செவ் 9 இல்
தகைமை - Bsc Civil Eng. தொழில் - Company
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச உயர் பதவி மணமகன்

பிறந்த திகதி - 10.04.1987 மதம் - இந்து
சாதி V பெண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 07 செவ் 5 இல் -
தகைமை - MBBS தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor மணமகன்

மணமகன் விவரம்

பிறந்த திகதி - 22.09.1989 மதம் - இந்து
சாதி - V ஆண் நட்சத்திரம் - மிருகசீரிடம் 3
கி.பா - 17 செவ் / சூரி 12 இல் 6"
தகைமை - Bsc. தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரசசேவை மணமகள்

பிறந்த திகதி - 13.08.1979 மதம் - இந்து
சாதி - V ஆண் நட்சத்திரம் - அச்சுவினி 3
கி.பா - 48 செவ் 5 இல்
தகைமை - Bsc, Msc தொழில் - UK மணமகன்
எதிர்பார்ப்பு - UK+ இலங்கை பட்டதாரி மணமகள் தேவை.

பிறந்த திகதி - 28.01.1991 மதம் - இந்து
சாதி - V ஆண் நட்சத்திரம் - திருவாதிரை
கி.பா - 31 செவ் 1 இல்
தகைமை - MBBS தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor, Eng. மணமகள்

பிறந்த திகதி - 04.09.1992 மதம் - இந்து
சாதி - V ஆண் நட்சத்திரம் - கேட்டை 4
கி.பா - 15 செவ் 2 இல்
தகைமை - GCE A/L தொழில் - Company work
எதிர்பார்ப்பு - A/L மணமகள் சாவகச்சேரி முன்னுரிமை

பிறந்த திகதி - 25.01.1989 மதம் - இந்து
சாதி - V ஆண் நட்சத்திரம் - ஆயிலியம்
கி.பா - 33 செவ் 12 இல்
தகைமை - GCE A/L, HNDA தொழில் - கடை உரிமையாளர்
எதிர்பார்ப்பு - A/L படித்த மணமகள் சாவகச்சேரி முன்னுரிமை

பிறந்த திகதி - 10.03.1988 மதம் - இந்து
சாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தரம் 4
கி.பா - 5 செவ் 9 இல்
தகைமை - GEC A/L தொழில் - Company உரிமையாளர்
எதிர்பார்ப்பு - A/L படித்த மணமகள்

பிறந்த திகதி - 21.11.1989 மதம் - இந்து
சாதி - V ஆண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 23 செவ் 1 இல்
தகைமை - CIMA Complete தொழில் - சொந்த நிறுவனம்
எதிர்பார்ப்பு - வெளிநாடு, உள்நாடு மணமகள்

பிறந்த திகதி - 10.08.1981 மதம் - இந்து
சாதி - V ஆண் நட்சத்திரம் - கேட்டை
கி.பா - 44 செவ் 12 இல்
தகைமை - GCE A/L தொழில் - சொந்த நிறுவனம்
எதிர்பார்ப்பு - A/L படித்த மணமகள்

Australia, Canada, UK, USA, Swiss, Germany, Italy, France, Newzelan- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.
காலைக்கதிர்
தொலைபேசி
021 222 3000
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம்
மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின்
பின்வரும் தொலைபேசி இலக்கத்திறூடாகவோ அல்லது நேரடியாகவோ
அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## உருப்படவே உருப்படாத நாடு

தண்டனைகளில் இருந்து விலக்களித்தல், பொறுப்புக் கூறலை நிலைநாட்ட மறுத்தல் போன்ற நீதி, நியாயமற்ற செயற்பாடுகளுக்காக தென்னிலங்கை அரசை வைது வந்தார்கள் சிறுபான்மையினரான தமிழர்களும் முஸ்லிம்களும்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை தொடர்பில் பொறுப்புக்கூறல் நிலைநாட்டப்படவேயில்லை. உண்மைகள் வெளிப்படுத்தப்படவில்லை. நீதி நியாயமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இது தொடர்பில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் குமுறிக்கொண்டிருக்கின்றார்கள்.

அதே போல ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டு சூத்திரதாரி கள் அம்பலப்படுத்தப்படவில்லை என்று கொழும்பு பேராயரும் கிறிஸ்தவ மக்களும் கொதித்துப் போய் நிற்கின்றனர். உண்மையான குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாட அப்பாவி முஸ்லிம் பலிக்கடாக்களாக்கப்பட்டு தடுப்புக் காவலில் வாடுகின்றனர் என முஸ்லிம்கள் சீறுகின்றனர்.

எல்லாவற்றுக்கும் காரணம் பொறுப்புக் கூறலை நிலைநாட்ட மறுத்து, தண்டனை விலக்களிப்பை சர் வசாதாரணமாகப் பின்பற்றும் ஆட்சித் தரப்பின் விட்டேத்தியான போக்குத்தான்.

ஆட்சி முறையின் இந்தக் கெடுதியான போக்கின் விளைவுகளை – கஷ்டங்களை – இந்த ஆட்சிப் பீடத்தை பௌத்த, சிங்கள இனவெறிப் போக்கின் அடிப்படையில் அதிகாரத்துக்குக் கொண்டு வந்த தென்னிலங்கை மக்களும் இன்று அனுபவிக்கும் சூழல் வந்திருக்கின்றது.

ஆட்சித் தரப்பின் பாரிய தவறுகளினால் நாடு இன்று இந்தப் பொருளாதார சீர்கேட்டின் சிக்கலை எதிர் கொள்ளும் அவலம் நேர்ந்திருக்கின்றது. என்ன பிழைகள், தவறுகள் இழைக்கப்பட்டன என்பது மக்களுக்கு நன்கு தெரியும். அந்தத் தவறுகளுக்கு யாரும் பொறுப்பேற்கவுமில்லை; தண்டிக்கப்படவுமில்லை.

இதுதான் இந்த ஆட்சி முறைத் தத்துவத்தின் அடிப்படைப்போக்கு.

நவம்பர் 2020 இல் சீனிக்கான வரியை ஐம்பது ரூபாயிலிருந்து வெறும் இருபத்தியைந்து சதமாகக் குறைத்தது அரசு. அதன் மூலம் சீனியின் விலை சந்தையில் குறைக்கப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால் விலை குறைக்கப்படவேயில்லை. இதன் மூலம் சீனி வர்த்தகத்தில் ஈடுபட்ட முக்கிய முதலைகள் சுமார் 9ஆயிரம் கோடி ரூபாவைச் சுத்திக் கொண்டு போனது தான் நடந்தது. இந்த ஊழலுக்கு யாரும் பொறுப்புக் கூறப்படவுமில்லை; தண்டிக்கப்படவு மில்லை.

நாட்டை உலுப்பும் காஸ் அடுப்புகளின் திடீர் தீப்பற்றல் மற்றும் வெடிப்புகளுக்கு சிலிண்டர்களில் அடைக்கப்படும் காஸ் கலவையின் விகிதத்தை மாற்றியமையே காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையால் உயிரிழப்புகள், சொத்து நாசங்கள், வீடுகளில் குழப்பங்கள், களேபரங்கள், சமூக நெருக்கடிகள் என இன்னோரன்ன நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. ஆனால் இப்படி காஸ் கலவையை மாற்றியமைக்க யார் அல்லது என்ன காரணம் என்பது வெளிப் படுத்தப்படவுமில்லை. பொறுப்புக் கூறல் நிலைநிறுத்தப்படவுமில்லை. யாரும் தண்டிக்கப்படவும் இல்லை.

அதே நிலைமைதான், ஒரேயடியாக அசேதன உரங்கள், இரசாயனக் களைகொல்லிகளுக்கு கட்டாயத் தடை என்று முட்டாள்தனமாக அறிவித்து, நாட்டின் உணவுப் பாதுகாப்பு முறைமையையே குழப்பி, கூழாம் பானமாக்கி, சொதப்பிய மேல்மட்ட நடவடிக்கை. அந்த வரலாற்றுத் தவறுக்கும் யாரும் பொறுப்புக் கூறப்படவுமில்லை; பொறுப்பேற்கவுமில்லை; தண்டிக்கப்படவுமில்லை. மாறாக, நிலைமயை விமரிசித்த அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பதவியிலிருந்து தூக்கிக் கடாசப்பட்டார்.

அரசியல் தலைமைகளும் அவற்றின் அடிவருடிகளும் தங்களைத் தப்பித்துக் கொள்வதற்காக தண்டனை விலக்களிப்பையும் பொறுப்புக் கூறல் மறுப்பையும் நிரந்தரக் கொள்கையாகப் பின்பற்றும் வரை இந்த நாடு உருப்படவே உருப்படாது.

# அரசின் அமைச்சரவை அரசமைப்புக்கு முரண்!

## ஓமல்பே சோபித தேரர் இப்படிக் கருத்து



தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சரவை அரசமைப்புக்கு முரணானது என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டியவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் அமைச்சர்களாகப் பதவிப் பிரமாணம் செய்யாதவர்கள் தமது பதவிகளில் செயற்பட முடியாது எனக் குறிப்பிட்டார்.

தற்போதைய நிதியமைச்சர் மாத்திரமே 20 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் கீழ் பதவிப்பிரமாணம் செய்துள்ளதாக தேரர் குறிப்பிட்டார்.

எனவே புதிய அரசமைப்பு திருத்தத்தின் கீழ் சத்தியப் பிரமாணம் செய்யாதவர்களுக்கு தமது பதவிகளில் செயற்பட அதிகாரம் இல்லை எனவும் சோபித தேரர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை கெரவலபிட்டிய மின்னுருப்பதி நிலையம், துறைமுக நகர ஒப்பந்தங்கள் மற்றும் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை வெளிநாட்டுக்குக் கையளித்தமை உள்ளிட்ட அனைத்தும் அரசமைப்புக்கு முரணானவை எனக் குறிப்பிட்டார்.

# சுயாதீன தொலைக்காட்சி சேவைக்கு புதிய தலைவர்



*சுயாதீன தொலைக்காட்சி சேவையின் தலைவராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பிரேமரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.*

*இன்று முதல் அமுலாகும் வரையில் அவரது நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.*

# மாடுகளுக்குக் குறி சுட்டால் வழக்கு தாக்கல் செய்யப்படும்!

## சைவமகாசபை எச்சரிக்கை




அகில இலங்கை சைவமகாசபையால் பசுக்களுக்கு குறி சுடல், நலமடித்தல் போன்ற செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தும் வகையிலும் வடக்கு மாகாணத்தில் முதன்முறையாக ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் மாட்டுக்கு குறி சுட்டவர் மீது கடந்த மாதம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் பரா. நந்தகுமார் தெரிவித்தார்.

நேற்று (திங்கட்கிழமை) யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த பத்து வருடங்களாக அன்பே சிவம் உயிர்களிடத்தில் அன்பு காட்டுவோம் என்ற தொனிப்பொருளில் பசுவதைக்கு எதிராகவும் எருது மாடுகளுக்கு குறி சுடுவதை நிறுத்துமாறு சைவ மகாசபை பல வழிகளிலும் முயற்சித்து வந்தது.

மாடுகளுக்கு குறிசுடுதல், நலமடித்தல் , பெயர் எழுதுதல் மற்றும் இரும்பு கம்பிகளை சூடாக்கி இலக்கங்களைப் பொறித்தல் ஆகியவற்றிற்கு எதிராக விழிப்புணர்வுப் பிரசாரங்கள் துண்டுப் பிரசுரங்கள் என பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டும் எதிர்பார்த்த பயன் கிட்டவில்லை.

இந்த நிலையில் கடந்த மாதம் ஊர்காவற்துறை பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் குறிசுட்டு பசுவை இரத்த காயத்துக்குள்ளாகிய நிலையில் குறித்த மாட்டின் உரிமையாளருக்கு எதிராக சைவ மகாசபையின் பொதுச் செயலாளர் வைத்தியர் பரா நந்தகுமாரால் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கின் மூன்றாம் தவணையான நேற்று வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் குறித்த சந்தேக நபரை 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல ஊர்காவற்துறை நீதிவான் அனுமயளித்து வழக்கு தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளது.

நமது செயற்பாட்டிற்கு எந்தவித கொடுப்பனவுகளையும் எதிர்பாராது சிரேஷ்ட சட்டத்தரணி திருக்குமரனின் வழிகாட்டலில் இளம் சட்டத்தரணி சிவஸ்கந்தஶ்ரீ முன்னிலையாகி இருந்தார் அவருக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

ஆகவே, வடக்கு கிழக்கில் வாயில்லா ஜீவன்களான மாடுகளுக்கு இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தால் அகில இலங்கை சைவமகாசபை இதுபோன்ற வழக்கு தாக்கல் செய்யும் என அவர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# பிரான்ஸில் 874 கார்கள் தீ வைத்து எரிப்பு!

பிரான்ஸில் புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் போது மொத்தம் 874 கார்கள் தீ வைத்து எரிக்கப் பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2019ஆம் ஆண்டில் மொத்தம் 1,316 கார்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன எனவும் அதனுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு இவ்வாறான சம்பவங்கள் குறைந்துள்ளன எனவும் பொலிஸார் சுட்டிக்காட்டினர்.

பெருமளவான தீவைப்பு முயற்சிகள் பொலிஸாரால் இவ்வாண்டு தடுத்து நிறுத்தப்பட்டன.

2005இல் பல நகரங்களில் நடந்த புத்தாண்டு கலவரத்தை தொடர்ந்து இக்காலப்பகுதியில் கார் எரிப்பு என்பது பிரெஞ்சு புறநகர்ப் பகுதிகளில் ஆண்டு தோறும் நடக்கும் நிகழ்வாக மாறியுள்ளது.

இந்நிலையில் இவ்வாறான சம்பவங்களைத் தடுக்க கடந்த புத்தாண்டு கொண்டாட்ட காலப்பகுதியில் சுமார் 32 ஆயிரம் தீயணைப்பு வீரர்கள், 95ஆயிரம் பொலிஸார் குவிக்கப்பட்டனர். இவ்வாறான கடுமையான கட்டுப்பாடுகளையும் மீறி கடந்த 31ஆம் திகதி இரவு புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது 874 கார்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# போராட்டங்களை அடுத்து பதவி விலகினார் சூடான் பிரதமர் ஹம்டோக்!




மக்களின் கடும் எதிர்ப்புப் போராட்டங்களை அடுத்து சூடான் பிரதமர் அப்துல்லா ஹம்டோக் கடந்த ஞாயிற்றுக்கிழமை பதவி விலகினார்.

இராணுவத்துடன் செய்து கொண்ட சர்ச்சைக்குரிய ஒப்பந்தத்தின் பிரகாரம் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்ட சில வாரங்களிலேயே அவரது பதவி விலகல் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

கடந்த ஒக்ரோபரில் சதிப் புரட்சி மூலம் சூடானில் இராணுவம் ஆட்சி - அதிகாரத்தைக் கைப்பற்றியது. தொடர்ந்து ஹம்டோக் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். ஆனால் இராணுவத்துடன் செய்துகொண்ட அதிகாரப் பகிர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து அவர் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டார்.

எனினும் இராணுவத்துடன் செய்துகொள்ளப்பட்ட அதிகாரப் பகிர்வு ஒப்பந்தத்தை முற்றாக நிராகரித்து அங்கு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். முற்றிலும் சிவில் அரசாங்கம் அமைய வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

இந்நிலையில் தனது பதவி விலகல் முடிவை அப்துல்லா ஹம்டோக் ஞாயிற்றுக்கிழமை அறிவித்தார். அவர் பதவி விலகிய நாளன்று இடம்பெற்ற எதிர்ப்புப் போராட்டங் களின்போதும் குறைந்தது இருவர் கொல்லப்பட்டன என மருத்துவர்கள் தெரிவித்த னர்.

நேற்று தொலைக்காட்சியில் உரையாற்றிய சூடான் பிரதமர் அப்துல்லா ஹம்டோக், சூடான் மிக மோசமானதொரு கட்டத்தில் உள்ளதாகக் கூறினார். நாடு பேரழிவை நோக்கிச் செல்வதை தடுக்க என்னால் இயன்றவரை முயற்சித்தேன். ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது நடக்கவில்லை எனவும் அவா தெரிவித்தார்.

இதனையடுத்தே எனது பதவியை இராஜினாமா செய்து, ஜனநாயக நாட்டில் மீண்டும் ஒரு தலைவரை உருவாக்க வழியேற்படுத்தவும் பதற்றங்களைத் தணிக்கவும் முடிவு செய்தேன் எனவும் அப்துல்லா ஹம்டோக் குறிப்பிட்டார்.

மாபெரும் மக்கள் எழுச்சிக்குப் பிறகு கடந்த 2019 ஆம் ஆண்டு சூடானின் நீண்டகால சர்வாதிகார ஜனாதிபதி ஓமர் அல் - பஷீர் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டார்.

இதனையடுத்து இராணுவம் மற்றும் சிவில் தரப்பினர் இணைந்து அதிகாரப்பகிர்வு ஒப்பந்தத்தை செய்துகொண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றனர்.

ஆனால் புதிய சிவில் அரசாங்கத்திற்கு எந்தளவு அதிகாரம் இருக்கும் என்பது தெளிவாகத் தெரியவில்லை. மேலும் இராணுவத்தின் மீது நம்பிக்கை இல்லை என தெரிவித்து எதிர்ப்பாளர்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை தலைநகர் கார்ட்டூம் மற்றும் ஓம்டுர்மன் நகர தெருக்களில் ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மக்களுக்கு அதிகாரம் என்று கோமிட்ட போராட்டக்காரர்கள், அரசியலை விட்டு இராணுவம் விலக வேண்டும் என வலியுறுத்தினர்.

இதேவேளை, சூடானில் இராணுவம் சதிப் புரட்சி மூலம் ஆட்சியை கைப்பற்றியதை தொடர்ந்து இடம்பெற்ற எதிர்ப்பு போராட்டங்களில் 50இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் நேற்று கொல்லப்பட்ட இருவரும் அடங்குகின்றனர்.



# தடுப்பூசி போடப்பட்டவர்களுக்கான தனிமைப்படுத்தல் காலத்தை குறைத்தது பிரான்ஸ்

முழுமையாக தடுப்பூசி செலுத்திய நிலையில் கொரோனா தொற்று உறுதியானவர்களுக்கான தனிமைப்படுத்தல் காலத்தை குறைக்க பிரான்ஸ் தீர்மானித்துள்ளது.

அதன்படி முழுமையாக தடுப்பூசி போடப்பட்டவர்களுக்கு திங்கட்கிழமை முதல் 10 நாள்களுக்குப் பதிலாக ஏழு நாள்களுக்கு மட்டுமே தனிமைப்படுத்த வேண்டும் என சுகாதார அமைச்சர் கூறினார்.

இருப்பினும் ஐந்து நாள்களுக்குப் பின்னர் அவர்களுக்கு கொரோனா தொற்று இல்லை என முடிவு வெளியாக்கினால் தனிமைப்படுத்தல் அவசியம் இல்லை என்றும் அறிவித்தார்.

இதேநேரம் கொரோனா தொற்று உறுதியான நபருடன் நெருங்கிய தொடர்புடைய முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்டவர்களுக்கு தனிமைப்படுத்தல் இல்லை என்றும் அறிவித்தார்.

இதேவேளை தடுப்பூசி செலுத்தாதவர்களுக்கு 10 நாள்கள் தனிமைப் படுத்தல் இருக்கும் என்றும் அதே விதிமுறைகளின் கீழ் ஏழு நாள்களுக்குப் பின்னர் தனிமைப்படுத்தலில் இருந்து வெளியேர வாய்ப்புள்ளது என்றும் கூறினார்

# ஒமிக்ரோன் நுரையீரலை தாக்குவது குறைவு: எலிகள் மீதான பரிசோதனையில் உறுதி!



ஒமிக்ரோன் வைரஸ் நுரையீரல் வரை சென்று அதிக பாதிப்புகளை ஏற்படுத்தாததால் அதிக உயிரிழப்புகள் ஏற்படா என மருத்துவ நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர்.

அமெரிக்கா மற்றும் ஜப்பானைச் சேர்ந்த விஞ்ஞானிகள் எலிகள் மீது ஒமிக்ரோன் வைரஸை செலுத்தி அதன் பாதிப்பு தொடர்பான ஆய்வில் ஈடுபட்டனர்.

இந்த ஆய்வில் டெல்டா உள்ளிட்ட ஏனைய திரிவுகளுடன் ஒப்பிடுகையில் ஒமிக்ரோன் நுரையீரலைத் தாக்குவது குறைவாக உள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதனால் இறப்பு விகிதம் குறைவாக இருப்பதும் கண்டறியப்பட்டது.

கொரோனாவின் பிற உருத்திரிவு வைரஸ்களுடன் ஒப்பிடுகையில் எலிகளின் நுரையீரலில் இருந்த ஒமிக்ரோன் பத்தில் ஒரு மடங்கு குறைவாக இருந்தது என ஆய்வு முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் ஹொங்கொங் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலும் ஏனைய திரிவுபுகளுடன் ஒப்பிடுகையில் ஒமிக்ரோன் நுரையீரலைத் தாக்குவது குறைவாக இருப்பதாகவும் இதனால் இறப்பு வீதம் குறைவாக இருப்பதாகவும் தெரியவந்தது.

# தவறுதலாகக் குண்டு பாய்ந்து சிறுவன் பலி

# புதுக்கோட்டை துப்பாக்கி சுடும் மையத்தை மூட வலிறுயுத்தி சீமான் அறிக்கை




புதுக்கோட்டையில் தவறுதலாக துப்பாக்கிக் குண்டு தாக்கிய சிறுவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம், பசுமலைப்பட்டியிலுள்ள காவலர் பயிற்சி மையத்தில், இந்திய மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் துப்பாக்கி சுடும் பயிற்சியில் ஈடுபட்டபோது கவனக்குறைவால் அருகில், குடியிருப்பில் இருந்த சிறுவன் புகழேந்தி தலையில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்திருந்தது. படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அச்சிறுவன் உயிரிழந்த செய்தியறிந்து பேரதிர்ச்சியும் பெருந்துயரமும் அடைந்தேன்.

சிறு வயது பிள்ளையைப் பறிகொடுத்து பரிதவிக்கும் பெற்றோருக்கு எனது ஆறுதலை தெரிவித்து அவர்களது ஆற்ற முடியா துயரத்தில் பங்கெடுக்கிறேன்.

கிராம மக்கள் வாழும் குடியிருப்புகளுக்கு அருகில் மிகவும் பாதுகாப்பில்லாத வகையில் அமைந்துள்ள துப்பாக்கி சுடும் பயிற்சி மையத்தை நிரந்தரமாக மூடவேண்டுமென்றும், இனி இது போன்ற துயரநிகழ்வுகள் வேறெங்கும் நிகழா வண்ணம் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டுமென்றும், உயிரிழந்த அப்பாவிச் சிறுவன் புகழேந்தியின் குடும்பத்திற்குத் துயர்துடைப்பு நிதியாக ஒன்றிய அரசும் தமிழ்நாடு அரசும் தலா 50 லட்சம் ரூபாய் வழங்க வேண்டுமென்றும், அக்குடும்பத்தில்ஒருவருக்குஅரசுப்பணி வழங்கி துயர் போக்கவேண்டுமென்றும் நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன், என்று தனது அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய அரசை வாசலுக்கே கொண்டு வந்திருப்பதாக மணிப்பூரில் மக்கள் மத்தியில் பிரதமர் மோடி உரை



ஐந்து மாநிலங்களுக்கான சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும் உத்தரப்பிரதேசம், பஞ்சாப், மணிப்பூர் உள்ளிட்ட மாநிலங்களில் இந்திய மத்திய அரசின் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதில் பிரதமர் மோடி கவனம் செலுத்தி வருகிறார். இதையொட்டி இன்று மணிப்பூர் சென்றுள்ள பிரதமர் மோடி 4800 கோடி ரூபா மதிப்பிலான 22 வளர்ச்சி திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.

அந்த நிகழ்ச்சிக்கு பின் அவர் னரையாற்றியபோது, ஒரு காலத்தில் மணிப்பூர் தனித்து விடப்பட்டிருந்தது. நான்பிரதமராக பதவியேற்கும் முன் பலமுறை இங்கு வந்திருக்கிறேன். அப்போது இங்குள்ள மக்கள் மனதில் சுமந்துள்ள துயரங்களை கேட்டறிந்தேன். 2014 ஆம் ஆண்டுக்கு பிறகு மொத்த இந்திய அரசையும் உங்கள் வாசலுக்கே கொண்டு வந்தேன்.

சில வருடங்களுக்கு முன்பு மணிப்பூரில் 6 சதவீத மக்களுக்கு மட்டுமே வீட்டில் குழாய் வழியாக குடிநீர் கிடைத்தது. இன்று ஜல் ஜீவன் திட்டத்தின் மூலம் 60 சதவீத மக்களுக்கு குழாய் நீர் கிடைத்துள்ளது. நீங்கள் மணிப்பூரில் நிலையான உறுதியான அரசை தேர்ந்தெடுத்துள்ளீர்கள். பெரும்பான்மை பலத்துடன் முழு ஆற்றலுடன் உங்களுக்காக பா.ஜ.க. அரசு இயங்கி வருகிறது.

சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளுக்கு பிறகும் அந்தமான் நிகோபார் தீவுகளில் உள்ள ஒரு சிகரம் 'ஹாரியட்' என்று அழைக்கப்படுகிறது. நாங்கள் அதன் பெயரை மணிப்பூர் மலை என மாற்ற இருக்கிறோம். இதற்கு முன் இருந்த அரசாங்கம் 'கிழக்கு பக்கம் பார்க்கவேண்டாம்' என்ற ஒரே ஒரு கொள்கையை மட்டுமே வைத்திருந்தது. ஆனால் நாங்கள் கிழக்கு மாநிலங்களுக்காக பணியாற்றுவோம் என்ற கொள்கையை வைத்திருக்கிறோம், என்று தெரிவித்திருக்கிறார்.



## பொதுமக்களுக்கு முகக் கவசம் வழங்கி பரபரப்பை ஏற்படுத்திய மு.க.ஸ்டாலின்

சென்னை கோட்டையில் கொரோனா பரவல் தடுப்பு குறித்து நடந்த ஆலோசனைக் கூட்டத்தில்பங்கேற்று விட்டுப் புறப்பட்ட தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அண்ணா சாலையில் திடீரென தனது வாகனத்தை நிறுத்தச்சொல்லி இறங்கி நடந்து சென்று பொதுமக்களுக்கு முகக் கவசங்களை வழங்கியமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஓமந்தூரார் பன்நோக்கு மருத்துவமனை பஸ் நிலையத்தில் நின்று கொண்டிருந்த பொதுமக்களுக்கு முகக் கவசங்களை வழங்கிய மு.க. ஸ்டாலின் ஒவ்வொருவரும் கண்டிப்பாக முகக் கவசம் அணிய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

பின்னர் ரிச் தெருவுக்கு எதிரே நடந்து வந்த பொதுமக்களுக்கும் முகக் கவசங்களை அவர் வழங்கினார். அப்போது சிலர் முகக் கவசம் அணியாமல் இருக்கின்றமையை அவதானித்து, தவறாது முகக் கவசம் அணிந்து கொள்ளுங்கள் என்று அறிவுரை கூறினார். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் இந்த திடீர் நடவடிக்கையால் அண்ணா சாலையில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

## வார இறுதியில் முழு ஊரடங்கு டெல்லி அரசு அதிரடி அறிவிப்பு



டெல்லியில் வார இறுதி நாள்களில் முழு ஊரடங்கு அமுல்படுதப்படுவதாக அம்மாநில துணை முதல்வர் மணீஷ் சிசோடியா அறிவித்துள்ளார்.

தொடர்பாக அவர் தகவல் வழங்கியபோது, டெல்லியில் ஒமிக்ரோன் தொற்று தினமும் அதிகரித்து வருகிறது. 8-10 நாள்களில் 11,000 கொரோனா பாதிப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. இதனால், வார இறுதி நாள்களில் முழு ஊரடங்கை அமுல்படுத்துகிறோம்.

தனியார் நிறுவனங்கள் 50 சதவீத பணியாளர்களுடன் மட்டுமே செயற்பட அனுமதிக்கப்படுகிறது. பஸ் மற்றும் மெட்ரோ நிலையங்களின் வெளியே மக்கள் கூடுவதைத் தடுக்க மீண்டும் பஸ்களும், மெட்ரோ ரயில்களும் முழு இருக்கைகளுடன் இயக்கப்படும். கொரோனாவைக் கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. மக்கள் கொரோனா விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும், இவ்வாறு டெல்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியா கூறினார்.

## பஞ்சாப்பில் பாடசாலைகளும் கல்லூரிகளும் மூடப்படவேண்டுமென உத்தரவு பிறப்பிப்பு




*இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் கொரோனா வேகமாக பரவி வரும் நிலையில் பஞ்சாப்பில் பாட்டியாலா அரசு மருத்துவ கல்லூரியில் 100 மாணவர்களுக்கும் கொரோனாப் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத் தியுள்ளது. இதையடுத்து அப்பகுதி கட்டுப்பாட்டுப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*கடந்த வாரம் பொறியியல் கல்லூரி ஒன்றில் 93 மாணவர்களுக்கு கொரோனாப் பாதிப்பு ஏற்பட்ட நிலை யில் இன்று அரசு மருத்துவக் கல்லூரியில் 100 மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அம்மாநிலத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளையும் கல்லூரிகளையும் மூட பஞ்சாப் அரசு உத்தரவிட்டுள்ளது.*

*இதுகுறித்து அம்மாநில அமைச்சர் ராஜ்குமார் வெர்கா தகவலளிக்கையில், அனைத்து மாணவர்களுக்கும் கொரோனா பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் சரண்ஜித் சிங் தலைமையில் அவசர ஆலோசனை கூட்டம் நடைபெறவுள்ளது. அதைத் தொடர்ந்து அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவெடுக்கப்படும் எனக்கூறியுள்ளார்.*

# காணி சுவீகரிப்பு மற்றும் அதிபர் இடமாற்றத்தைக் கண்டித்து கவனயீர்ப்புப் போராட்டம்




மட்டக்களப்பு ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தில் பாடசாலை காணி சுவீகரிப்பு மற்றும் அதிபர் இடமாற்றத்தைக் கண்டித்து பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் ஒன்றிணைந்து பாடசாலையின் வாயில் கதவைப் பூட்டி வீதியில் இறங்கி நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நடவடிக்கையினால் பாடசாலை கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. வாழைச்சேனை பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகைதந்து பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

# வெள்ள நீரில் தவறி வீழ்ந்து காணாமல் போன விவசாயி

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பட்டிமேடு வடக்கு வயல் பகுதியான பள்ளப்பாமாங்கை துரிசில் ஏற்பட்ட வெள்ள நீரில் தவறி வீழ்ந்து விவசாயி ஒருவர் காணாமல் போயுள்ள சம்பவம் கடந்த திங்கட்கிழமை காலையில் இடம்பெற்றுள்ளதாக கோளாவில் பொலிசார் தெரிவித்தனர்.

புளியம்பத்தை கிராமத்தைச் சேர்ந்த 56 வயதுடைய கணபதி கிருபைராஜன் என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

குறித்த நபர் வயலுக்கு சென்றுள்ள நிலையில் வெள்ள நீர் வாய்க்காலில் நிரம்பி அதிகரித்ததையடுத்து அந்த வாய்க்காலின் துரிசில் இருந்த பலகையை அகற்ற முற்பட்டபோது தவறி துரிசின் கீழ் வீழ்ந்ததையடுத்து வெள்ளநீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் இராணுவத்தினர் மற்றும் உறவினர்கள் சம்பவ இடத்துக்கு சென்று அவரை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை கோளாவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# போலியான செய்திகள் தொடர்பில் எச்.எம்.எம். ஹரீஸ் எம்.பி. விளக்கம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து தனியான முஸ்லிம் கூட்டணியை உருவாக்கத் தீர்மானித்துள்ளனர் என்று தமிழ் ஊடகங்கள் சில வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயம் உண்மைக்கு புறம்பான கற்பனையான செய்தியாகும். இந்த இட்டுக்கட்டப்பட்ட பொய்யான செய்தியில் எவ்வித உண்மைகளுமில்லை என்பதை ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் இறைவன் மீது ஆணையிட்டு கூறிக்கொள்கிறேன் என நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம். எம். ஹரீஸ் தெரிவித்தார்.



சில ஊடகங்களில் வெளியாகியுள்ள முஸ்லிம் எம்.பிக்கள் தொடர்பான செய்திகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் இது தொடர்பில் கருத்து கூறுகையில் நாடு கடந்த புலி ஆதரவாளர்களின் அனுசரணையுடன் நடத்தப்படும் ஊடகமொன்று தமிழ் கட்சிகள் வடக்கு கிழக்கு இணைப்பை உறுதிப்படுத்தும் 13ஆம் திருத்தம் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை செய்துவரும் இந்த நிலையில் அதற்கு எதிராக வடக்கு கிழக்கை சேர்ந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகிறார்கள். எனவே இந்த ஒப்பந்தத்தை செய்யவிடாமல் தடுத்துவிடுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாக முஸ்லிம் மக்களை திசைதிருப்பும் நோக் கிலும், இந்த முஸ்லிம் எம்.பிக்களின் நம்பகத்தன்மையை கேள்விக்குட்படுத்துவதற்காகவும் இவ்வாறான செய்தியை வெளியிட்டு மக்களைக் குழப்புகின்றனர் எனவும்.

புதிய கூட்டணி அமைப்பது பற்றியோ அல்லது மொட்டுடன் கூட்டணியை அமைத்து இணைவது தொடர்பிலோ, அரசாங்கத்தில் நேரடியாக இணைந்து அமைச்சர் பதவிகள் பெறுவது பற்றியோ கற்பனையில் கூட நாங்கள் நினைக்கவில்லை. இது தொடர்பில் நாங்கள் எவ்வித பேச்சுவார்த்தைகளையோ, ஆலோசனைகளையோ, நடவடிக்கைகளையோ எடுக்கவில்லை என்பதை இந்த சந்தர்ப்பத்தில் பொறுப்புடன் கூறிவைக்க விரும்புகிறேன். மக்களின் நலனுக்காக ஒன்றிணைந்து செயற்பட்டு வரும் நாங்கள் உரிமைசார்ந்த விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்திலும், நாடாளுமன்றத்திற்கு வெளியே ஊடகங்களிலும், பொதுநிகழ்வுகளிலும் குரல்கொடுத்து எங்களின் சமூக உணர்வை நிரூபித்து வரும் இந்த சூழ்நிலையில் அவர்களின் தந்திரோபாய அரசியல் முன்னெடுப்பாக எங்களின் மீது சந்தேகங்கொள்ள செய்யும் வகையில் கற்பனையில் புனையப்பட்ட கதையை வெளியிட்டுள்ளனர்.

நான் தொடர்ந்தும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியி லேயே பயணிப்பதில் உறுதியாக இருக்கிறேன். ஏனைய சக நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவர் களுடைய கட்சிகளில் பயணிப்பதில் உறுதியாக இருக்கிறார்கள் என்று நம்புகிறேன். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை பலப்படுத்தி சமூக விடயங்களில் தொடர்ந்தும் கரிசனையுடன் செயற்படுவதில் உறுதியாக இருக்கும் நான் இவ்வாறான போலியான செய்திகளை பற்றி அலட்டிக் கொள்ளப் போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

# வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்ற வளாகம் வெள்ளத்தில் மூழ்கியது

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதி மன்ற வளாகம் மற்றும் களஞ்சியசாலை என்பன வெள்ளத்தில் மூழ்கி காணப்படுகின்றன.

நீதிவான் ஓய்வு அறையில் இருந்து நீதி மன்றத்திற்கு செல்லும் வழி நீரினால் முற்றாக மூழ்கி காணப்படுவதுடன், நீதி மற்றத்திற்கு செல்ல முடியாதளவுக்கு வெள்ள நீர் நிறைந்து காணப்படுகின்றது.

இதனால் நீதிவான், சட்டத் தரணிகள், நீதி மன்ற அலுவலர்கள், பொலிஸார், மற்றும் பொது மக்கள் என அனைவரும் மிகவும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என சட்டத்தர ணிகளும் நீதி மன்ற பதிவாளரும் தெரிவித்தனர்.



வாழைச்சேனை நீதி மன்றத் திற்கு புதிய கட்டடம் ஒன்று அமைப்பதற்காக நீதி அமைச்சினால் நிதி ஒதுக்கப்பட்டு ஒப்பந்த வேலைகள் ஆரம்பிக்கப்படவிருந்த வேளையில் அமையவுள்ள இடம் தொடர்பாக அரசியல் தலையீடு காரணமாக ஒப்பந்த வேளைகள் நிறுத்தப்பட்டுள்ளன எனவும் இதனால் நீதிவான் உட்பட அங்கு கடமை புரியும் அனைவரும் சிறு மழை பெய்தாலும் தொடர்ந்து பாதிபக்கப் படுவதாகவும் சட்டத் தரணிகள் தெரிவித்தனர்.

# சாய்ந்தமருது நகர சபை கோரிக்கையை வைத்து தேசிய காங்கிரஸ் மக்களை ஏமாற்றக் கூடாது

சாய்ந்தமருது, ஜன.5

சாய்ந்தமருது நகர சபை கோரிக்கையை வைத்து - இன்னும் இன்னும் அந்த மக்களை தேசிய காங்கிரஸ் தலைவர் ஏமாற்றக் கூடாதென முஸ்லிம் காங்கிரஸின் பிரதிப் பொருளாளரும் உயர்பீட உறுப்பினருமான ஏ.சி.யஹி யாகான் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று மாலை ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையின் பதவிக் காலம் பெப்ரவரி மாதத்துடன் நிறைவடையவுள்ள நிலையில் - 2022 பெப்ரவரியில் சாய்ந்தமருது நகர சபை மலரும் என்று கூறி 9 ஆயிரம் வாக்குகளை கபளீகரம் செய்த அதாவுல்லா - பொதுத் தேர்தலிலும் அம்மக்களின் வாக்குகளை பெற்றார். ஆனால், நகர சபை இதுவரை சாய்ந்தமருதுக்கு கிடைக்கவில்லை.

சாய்ந்தமருதைச் சேர்ந்த - தேசிய காங்கிரஸ் முக்கியஸ்தர் சலீமும் - அதாவுல்லாவுடன் இணைந்து , சாய்ந்தமருது நகர சபை கோஷத்தை முன்வைத்து வாக்குகளை பெற்று ஏமாற்றி வருகின்றார். இதுவோர் ஆரோக்கியமான செயற்பாடல்ல. ஒருபோதும் - அதாவுல்லாவினால் நகர சபையை பெற்றுத் தர முடியாது. அவருக்கு அரசாங்கத்தில் பலம் இல்லாமை என்பது வர்த்தமானி இரத்துச் செய்யப்பட்டவுடனேயே அறிய முடிந்தது.

2022 பெப்ரவரி மாதத்துக்கு இடையில் அதாவுல்லாவும் சலீமும் நகர சபையை பெற்றுத் தர வேண்டும். இல்லையேல் - தங்களால் முடியாது என மக்கள் முன்னிலையில் பகிரங்கமாகக் கூறி ஒதுங்கிக்கொள்ள வேண்டும். இன்னும் இன்னும் சாய்ந்தமருது மக்களை ஏமாற்ற முனையக் கூடாது - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# விவசாயிகளின் முறைப்பாடுகள் தொடர்பாக ஒரு வாரத்துக்குள் கணக்காய்வு அறிக்கை!

## சமர்ப்பிக்குமாறு டக்ளஸ் உத்தரவு



கிளிநொச்சி டி-07 பெரிய பரந்தன் கமக்கார அமைப்பினுடைய நிதி முறைகேடுகள் தொடர்பில் விவசாயிகளால் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பாக ஒரு வார காலத்துக்குள் கணக்காய்வுக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தேவரதனிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் உள்ள டி-07 பெரிய பரந்தன் கமக்கார அமைப்பின் பொருளாளரால் சுமார் ஒரு கோடியே 3 லட்சத்து 60 ஆயிரத்து 240 ரூபா நிதி எந்த வித அனுமதியும் இன்றி செலவிடப்பட்டுள்ள தாகவும் சுமார் நான்கு வருடங்களாக கணக்காய்வுகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் குறித்த அமைப்பால் பெருந்தொகை நிதி மோசடி செய் யப்பட்டதாகவும் பிரதேச விவசாயிகளால் கடந்த 28 ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான நான்கு ஆண்டுகளிலும் குறித்த அமைப்பினுடைய நீதி முறையற்ற விதத்தில் செலவிடப்பட்டுள்ளது என்றும் குறிப்பாக உத்தியோகத்தர் மற்றும் உரிய அதிகாரிகளின் அனுமதியின்றி செலவிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பாக நன்கொடை என்ற பெயரில் 2018 ஆம் ஆண்டு 22 ஆயிரம் ரூபாவும் 2019 ஆம் ஆண்டிலேயே 53 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இந்த நன்கொடை நிதி யாருக்கு யாருடைய அனுமதியில் வழங்கியது என்பது கூடத் தெரிவிக்கப்படவில்லை இவ்வாறு பெருந்தொகை நிதி முறையற்ற விதத்தில் கையாளப்பட்டிருப்பதாகவும் விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நான்கு வருடங்களுக்கான கணக்கறிக்கைகள் எதிலும் எந்த கையொப்பங்களும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான விடயங்களை சுட்டிக்காட்டிய போதும் மேற்படி அமைப்பினுடைய கணக்குவிவரங்களை திணைக்களம் சார்ந்த சில உயர் அதிகாரிகள் இதனை மூடி மறைக்க முற்படுகின்றனர் எனவும் விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

விவசாயிகளின் கோரிக்கையை அடுத்து பதிலளித்த மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் குறித்த அமைப்பினுடைய கணக்கறிக்கை தொடர்பில் உரிய ஆய்வுகளை மேற்கொண்டு ஒரு வார காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

## டிக் டொக்கால் வந்தது சர்ச்சை கொழும்பில் இளைஞன் கொலை!


கொழும்பு - கிராண்ட்பாஸ் பகுதியில் இளைஞர் ஒருவர் குத்திக்கொல்லப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்று பிற்பகல் இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது.

17 வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. டிக் டொக் காணொளி தொடர்பான தகராறில் குறித்த இளைஞர் கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மாதம்பிட்டிய லேனில் வைத்து குறித்த இளைஞரை கத்தியால் குத்தியதாகவும், இதனையடுத்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட நபரும் மேலும் இருவர் ரண்திய உயன வீட்டுத் தொகுதியை நோக்கி பயணித்தனர் எனவும், டிக் டொக் காணொளி தொடர்பாக ஒரு குழுவினர் அவர்களைத் தாக்கினர் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அதன் பின்னர், பாதிக்கப்பட்ட நபரை கத்தியால் குத்தியதுடன், சந்தேக நபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். கிராண்ட்பாஸ் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## உருளைக்கிழங்கு, வெங்காயம் விலைகள் பாரிய வீழ்ச்சி நிலை!



இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு பெரிய வெங்காயத்தின் விலை சந்தையில் குறைவடைந்துள்ளது.

இவற்றின் வர்த்தக பொருள்களுக்கான வரி குறைக்கப்பட்டதே இதற்கான காரணமாகும். நிதியமைச்சு கடந்த 31 ஆம் திகதி இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் சம்பந்தமாக சுங்கவரியை 30 ரூபாவால் குறைத்திருந்தது.

சந்தையில் இவற்றுக்கு இருந்த விலையைக் குறைப்பதே இதன் நோக்கமாகும்.

இதற்கமைவாக ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய நிதியமைச்சரின் அங்கீகாரத்துடன் சம்பந்தப்பட்ட வரி குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வல்வெட்டியில் நடத்தப்படும் பட்டத் திருவிழா மண்ணுக்குரிய பெருமையுடன் நடக்கவேண்டும்

### சாள்ஸ் எம்.பி. வலியுறுத்து




எதிர்வரும் தைப்பொங்கல் தினமன்று வல்வெட்டித்துறையில் இடம்பெறவுள்ள பட்டத் திருவிழா ஏற்பாட்டாளர்களால் தமிழ் இனப்படுகொலை புரிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் அனுசரணையுடன் நடைபெற உள்ளமையை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். இந்த பட்டத் திருவிழா வல்வெட்டித்துறை மண்ணுக்குள்ள பெருமையுடன் நடைபெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

நீண்ட இனவழிப்பையும் தமிழர்களது பூர்வீக நிலங்களை முறையற்ற விதத்தில் பறிப்பதும் என கொடூர ஆட்சி நடத்தும் இந்த இந்த அரசாங்க அமைச்சர்களின் பிரசன்னத்துடன் அவர்களின் அனுசரணையுடன் நடைபெறுவது வல்வெட்டித்துறை மண்ணுக்கும் மக்களுக்கும் செய்யும் துரோகம்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஐ.நா. மனித உரிமைப்பேரவையில்எழுத்துமூலஅறிக்கையை இலங்கை அரசாங்கம் சமர்ப்பிக்க வேண்டிய நிலையில் 2009 ஆம் ஆண்டு இனப்படுகொலையை நடத்திய ராஜபக்ஷ குடும்பத்தினரை பிரதம விருந்தினராக அழைத்து இந்த பட்டத் திருவிழா நடத்துவது 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இனப்படுகொலையை சர்வதேச அரங்கிலிருந்து இல்லாது செய்வதற்குரிய அர சாங்கத்தின் இராஜதந்திர நடவடிக்கையே இது.

நீண்டகாலமாக மனித உரிமை செயற்பாட்டாளர்களால் எதிர்பார்த்திருக்கும் இந்த நேரத்தில் அவர்களின் முயற்சி வீண் போகும் வகையில் இந்தச் செயற்பாடு சர்வதேசத்தினுடைய பார்வை இனப்படுகொலை புரிந்தவர்களை அழைத்து இந்தப் பட்டத்திருவிழாவை நடத்துவது சர்வதேச அரங்கிலிருந்து இலங்கை அரசாங்கத்தைத் தப்பிப்பதற்கு உரிய சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொடுக்கும். ஆகவே, ஏற்பாட்டாளர்கள் இதைக் கவனத்தில் கொண்டு பட்டத்திருவிழா அரசியல் கலப்படமற்றவகையில் சிறப்பாக நடத்தவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. உடனடியாக இந்த நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் இந்த புதிய நடைமுறையைக் கைவிட்டு இந்த மண்ணில் காலா காலமாக நடைபெற்று வரும் பட்டத் திருவிழா போன்று இம்முறையும் நடைமுறைப்படுத்த முன்வருமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன். - என்றார்.

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஆண்டு வாராந்தச் சொற்பொழிவு நிகழ்வு

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் ‘ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஆண்டு’ எனப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள 2022 ஆம் ஆண்டிலே, நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் ‘வாராந்தச் சொற்பொழிவும் மாதாந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்’ என்னுந் தொனிப்பொருளில், இந்து சமய அறநெறிப் பாடசாலைகளிலே மேற்படி நிகழ்வுகள், கனடா ரொறன்ரோவை இடத்தை வதிவிடமாகக் கொண்ட சிவஸ்ரீ . பாலசுப்பிரமணியக்குருக்கள் திருகுணானந்தக்குருக்களின் அனுசரணையுடன் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்தச் செயற்றிட்டத்தில், ஆரம்ப நிகழ்வாக சிறப்புச்சொற்பொழிவு யாழ்ப்பாணம் வேலணை சர்வசக்தி அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் எதிர்வரும் 07.01.2022 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி த.விஜிதர் தலைமையில் சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர் செ.த.குமரன் ’சைவத்தின் காவலர் நாவலர்’ என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். நன்றியுரையை அறநெறிப் பாடசாலை ஆசிரியர் செல்வி பொ.யமுனாதேவி ஆற்றுவார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படும்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.01.2022இல் வெளியிடப்பெற்றது.